 පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - උතුරු මැද පළාත
மாகாணக் கல்வித் திணைக்களம் - வட மத்திய மாகாணம்
DEPARTMENT OF EDUCATION – NORTH CENTRAL PROVINCE

தரம்
12

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2017

பாடம் :- பொருளியல்

பாடசாலையின் பெயர் : ........................................................................................

மாணவர் பெயர்/ சுட்டெண் : ........................................................

........................................................................................ நேரம் : 2.00 மணித்தியாலம்

**அறிவுத்தல்கள் :-**

- **எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை தருக.**
- **உமது சுட்டெண்ணை தெளிவாக எழுதுக.**

Education NCP - www.edncp.lk

- **01 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியான விடையை தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மேல் எழுதுக.**

(01) பொருளியல் சமூக விஞ்ஞானம் எனப்படக் காரணம்

(1) அது அருமையை ஆய்வு செய்வதால்
(2) அது மனிதர்களை ஆய்வு செய்வதால்
(3) அது சமூகங்களை ஆய்வு செய்வதால்
(4) அது எல்லையற்ற மனித நடத்தைகளை ஆய்வு செய்வதால்
(5) அது அருமை தொடர்பான மனித நடத்தைகளை ஆய்வு செய்வதால் (.........)

(02) நேர் பொருளியலை விட நியமப் பொருளியல் ஆய்வுகள் சிறந்ததென நவீன பொருளியலாளர்கள் கருத பிரதான காரணமாக அமைவது

(1) அது கடந்த காலத்தில் உண்மையாக நடந்தேறிய பொருளாதார நிகழ்வுகளை கூறுவதால்
(2) அது நடைமுறை உண்மையுடன் தொடர்புடைய பொருளாதார விடயங்களை ஆய்வு செய்வதால்
(3) அது உலகில் என்ன நடைபெற வேண்டும் எப்படி நடைபெற வெண்டும் என சிந்தித்தல், திட்டமிடல் என்பவற்றுடன் தொடர்புபடுவதால்
(4) நேர் பொருளியலை அறிவதை விட நியமப் பொருளியலை ஆய்வு செய்வது இலகு என்பதால்
(5) பலரது கருத்துக்களை பெற முடியும் என்பதால் (.........)

(03) சிற்றினப் பொருளியலில் இருந்து பேரினப் பொருளியலை வேறுபடுத்தும் சிறப்பான விடையை தெரிக.

| | சிற்றினப் பொருளியல் | பேரினப் பொருளியல் |
|---|---|---|
| (1) | முழுமையான பொருளாதார ஆய்வு | - சில அலகுகளை நுணுகி ஆய்வு செய்தல் |
| (2) | சில அலகுகளை நுணுகி ஆய்வு செய்தல் | - சில அலகுகளை முழுமையாக ஆராய்தல் |
| (3) | சில அலகுகளை முழுமையாக ஆராய்தல் | - பொருளாதாரத்தில் ஒரு பகுதியை ஆராய்தல் |
| (4) | பொருளாதாரத்தில் சில அலகுகளை நுணுகி ஆராய்தல் | - முழுமையான பொருளாதார ஆய்வு |
| (5) | குறுகிய கால ஆய்வுகள் | - நீண்ட கால ஆய்வுகள் (.........) |


(04) ஒரு பொருளாதார பண்டத்தின் சிறப்பியல்பு என்ன?

(1) நுகர்வோருக்கு அவசியமான பண்டங்கள் (2) நீடித்த பாவனையுடையவை
(3) இலாபத் தன்மை கொண்டவை (4) தெரிவு செய்து எடுக்கக் கூடியவை
(5) உற்பத்தி சாதனங்களின் பயன்பாட்டினால் ஏற்படுத்தப்படுபவை (.........)

(05) குறித்த ஒரு நடவடிக்கையின் அமைய செலவானது
   (1) அந் நடவடிக்கையினால் தியாகம் செய்யப்பட்ட வருமானங்களை மட்டும் உள்ளடக்கும்
   (2) அந் நடவடிக்கையின் பணச் செலவை மட்டும் உள்ளடக்கும்
   (3) அந் நடவடிக்கையின் பணச் செலவு மற்றும் தியாகம் செய்யப்பட்ட வருமானம் ஆகிய இரண்டையும் உள்ளடக்கும்
   (4) அந் நடவடிக்கையின் நேரடி நன்மைகளை மட்டும் உள்ளடக்கும்
   (5) அந் நடவடிக்கையை ஆரம்பிக்க ஏற்பட்ட செலவை உள்ளடக்கும். (……...)

(06) உற்பத்தியில் செயற்றிறனை அடைவதற்கான இரு நிபந்தனைகளும் யாவை?
   (1) பூரண வேலைமட்டமும், பூரண உற்பத்தியும்
   (2) எல்லைப் பயனும், எல்லைச் செலவும்
   (3) இரு வேறுபட்ட பண்டங்களும், பூரண பதிலீடும்
   (4) அருமையும், தெரிவும்
   (5) சரியான வளங்களும், பொருத்தமான வளங்களும் (……...)

(07) தொழில்நுட்ப முன்னேற்றம் எற்படுவதற்கு முன்னரும் பின்னரும் நாடொன்றின் உற்பத்தி சாத்திய வளையிகளை முறையே $PPC_1$ , $PPC_2$ என்பன காட்டுகின்றன.
தொழிநுட்ப முன்னேற்றத்தின் பின்னர் OA என்றளவு மூலதன பண்ட உற்பத்திக்கான அமையச் செலவு யாது?




   (1) DE    (2) DG    (3) FG    (4) EG    (5) EF (……...)

(08) பின்வருவனவற்றுள் முதலாளித்துவத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரமொன்றின் பண்பல்லாதது எது?
   (1) கேள்வி, நிரம்பலை அடிப்படையாகக் கொண்ட விலைபொறிமுறை
   (2) தனியார் சொத்துரிமை முறை
   (3) சுய கரிசனையுடன் செயற்படும் வீட்டுத் துறையும், முயற்சியாளர்களும்
   (4) சுதந்திரமான முயற்சியாண்மை
   (5) மத்திய திட்டமிடல் முறைமை (……...)

(09) பொருளாதார ரீதியான பிரதிபலனுக்காக ஊழியத்தை நிரம்பல் செய்யத் தயாராக உள்ள தரப்பினராக கருத முடியாதவர்கள்
   (1) தொழிலற்றோர்
   (2) சுயதொழிலில் ஈடுபடுவோர்
   (3) முதலாளிமார்
   (4) சிரமதான வேலை செய்வோர்
   (5) குடும்ப ஊழியர்

(……...)

Education NCP - www.edncp.lk

(10) செயற்றிறன் வாய்ந்த கேள்வி (Affective Demand) என்பது

(1) கொள்வனவு செய்வதற்கான விருப்பம் உள்ளவர்களின் கொள்வனவிற்கான தீர்மானம் ஆகும்
(2) கொள்வனவு செய்வதற்கான ஆற்றல் உள்ளவர்களின் கொள்வனவிற்கான தீர்மானம் ஆகும்
(3) கொள்வனவு செய்வதற்கான விருப்பம், ஆற்றல் உள்ளவர்களின் கொள்வனவிற்கான தீர்மானம் ஆகும்
(4) எண்ணற்ற மனித விருப்பங்களை பூர்த்தி செய்து கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்ட விருப்பங்கள் ஆகும்
(5) சந்தையிலுள்ள அனைத்து தனிநபர்களின் கேள்வியின் கூட்டு மொத்தமாகும் (.........)

(11) P = 50 – 0.25 Qd எனும் கேள்வி சமன்பாட்டில் கேள்வித் தொகையை முதன்மைப் படுத்தி புதிய சமன்பாடொன்றை அமைக்க


(1) Qd = 100 – 4p (2) Qd = 200 – 2p (3) Qd = 50 – 0.25p
(4) Qd = 200 – 4p (5) Qd = 200 – 0.25p (.........)

(12) கார் ஒன்றின் குறுக்கு கேள்வி நெகிழ்ச்சி குணகம் பெற்றோலின் விலை சார்பாக – 0.5 என கருதுக. கார் ஒன்றின் சராசரி விலை ரூ.900,000.00 ஆகும். வாராந்தம் 10,000 கார்கள் விற்பனை செய்யப்பட்டன. காரின் சராசரி விலை மாறாத நிலையில் பெற்றோல் லீட்டர் ஒன்றின் விலை ரூ 120.00 இலிருந்து
ரூ 132.00 ஆக அதிகரித்திருப்பின் தற்போது காரின் வாராந்த விற்பனை அளவுகள்

(1) 500 கார்கள் (2) 9 000 கார்கள் (3) 9 500 கார்கள்
(4) 5000 கார்கள் (5) 10 500 கார்கள் (.........)

(13) அருகில் உள்ள வரைபடத்திற்கிணங்க குறித்த ஒரு விவசாய பண்டத்திற்கு அரசு $P_2$ விலையை உத்தரவாத விலையாக பிரகடனம் செய்துள்ளது. கூடவே $Q_2$ முதல் Q3 வரையிலான மிகை நிரம்பலை கொள்வனவு செய்வதன் மூலம் விலை வீழ்ச்சி அபாயத்திலிருந்து வழங்குனர்களை பாதுகாக்க அரசு எண்ணியுள்ளது. உத்தரவாத விலையை அமுல்படுத்திய பின்னர் உற்பத்தியாளர் மிகையில் ஏற்பட்ட மாற்றம்

(1) B,C பரப்பளவினால் குறையும்
(2) B,C, J பரப்பளவினால் அதிகரிக்கும்
(3) B,C, J பரப்பளவினால் குறையும்
(4) B,C பரப்பளவினால் அதிகரிக்கும்
(5) C,E பரப்பளவினால் அதிகரிக்கும்




(.........)

(14) அரசு குறித்த ஒரு பண்டத்திற்கு அலகு மானியமாக 5/= வினை வழங்க சமநிலை விலையும் 5/= ஆல் வீழ்ச்சியடைந்தமை அவதானிக்கப்பட்டது. இந் நிலைமை தோன்ற காரணம் குறித்த பண்டமானது

(1) முடிவிலி விலைசார் கேள்வி நெகிழ்ச்சியை கொண்டிருந்தமையாகும்
(2) பூச்சிய விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சியை கொண்டிருந்தமையாகும்
(3) முடிவிலி விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சியை கொண்டிருந்தமையாகும்
(4) ஒன்றிலும் கூடிய விலைசார் கேள்வி நெகிழ்ச்சியை கொண்டிருந்தமையாகும்
(5) ஒன்றிலும் கூடிய விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சியை கொண்டிருந்தமையாகும்

(.........)


Education NCP - www.edncp.lk

(15) A பண்டத்தினது கேள்விச் சமன்பாடு Qd=40-20p ஆகும். A பண்டத்தினது கேள்வி நெகிழ்ச்சிக் குணகம் ஒன்றாக அமையும் போது அங்கு உள்ள நுகர்வோர் உபரியின் அளவு

(1) 40 ரூபா (2) 20 ரூபா (3) 80 ரூபா
(4) 60 ரூபா (5) பூச்சியம்

(16) குறித்த ஒரு பண்டத்தின் சந்தைக் கேள்வி வளையி பின்வருமாறு காட்டப்படுகின்றது. இக் கேள்வி வளையியுடன் தொடர்புடைய சரியான கேள்வி சமன்பாடு

(1) $Qd = 600 - 10p$
(2) $Qd = 60 - 10p$
(3) $Qd = 600 - 0.1p$
(4) $Qd = 60 - 0.1p$
(5) $Qd = 600 - 10/P$




(……..)

(17) பின்வருவனவற்றில் பொருளொன்றின் நிரம்பல் வளையியை இடப்புறமாக நகர்த்துவது எது?

(1) உற்பத்தி செலவில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு (2) உற்பத்தி செலவில் ஏற்படும் ஓர் வீழ்ச்சி
(3) விலையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு (4) விலையில் ஏற்படும் ஓர் வீழ்ச்சி
(5) கேள்வியில் ஏற்படும் ஓர் வீழ்ச்சி (……...)

(18) விலை வீழ்ச்சியடையுமிடத்து X பண்டத்தின் மீதான மொத்த செலவு அதிகரிக்கிறது. Y பண்டத்தின் மீதான மொத்த செலவு குறைகிறது.

| | X பண்டம் | Y பண்டம் |
|---|---|---|
| (1) | பூச்சிய நெகிழ்ச்சியுடையது | நெகிழ்ச்சியற்றது |
| (2) | நெகிழ்ச்சியற்றது | நெகிழ்ச்சியுடையது |
| (3) | பூச்சிய நெகிழ்ச்சியுடையது | நெகிழ்ச்சியுடையது |
| (4) | நெகிழ்ச்சியுடையது | அலகு நெகிழ்ச்சியுடையது |
| (5) | நெகிழ்ச்சியுடையது | நெகிழ்ச்சியற்றது |

(19) குறித்த ஒரு பொருளின் நிரம்பல் வளையியின் மீதுள்ள சகல புள்ளிகளிலும் நெகிழ்ச்சிக் குணகம் அலகு நெகிழ்ச்சியை கொண்டிருந்தது. இந்நிரம்பல் வளையியுடன் தொடர்புடைய சரியான சமன்பாட்டை தெரிவு செய்க.

(1) $Qs = 10P$ (2) $Qs = 100 + 10P$ (3) $Qs = 10 + P$
(4) $Qs = 100 + 0.1P$ (5) $Qs = 100 + 10P$ (……...)

Education NCP - www.edncp.lk

(20) பின்வரும் அட்டவணை உற்பத்தி நிறுவனங்கள் ஐந்தின் உற்பத்திப் பொருட்களுக்குரிய நெருங்கிய பதிலீடுகளின் குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சிக் குணகங்களை காட்டுகிறது.

| உற்பத்தி நிறுவனம் | குறுக்குகேள்வி நெகிழ்ச்சி |
|---|---|
| நிறுவனம் A | + 6.0 |
| நிறுவனம் B | + 8.0 |
| நிறுவனம் C | + 4.0 |
| நிறுவனம் D | + 0.8 |
| நிறுவனம் E | + 0.3 |


மேற்படி நிறுவனங்களில் எது அதி கூடிய சந்தை சக்தியை கொண்டிருக்கும்.

(1) நிறுவனம் A (2) நிறுவனம் B (3) நிறுவனம் C

(4) நிறுவனம் D (5) நிறுவனம் E (……...)

(21) கீழ்காணும் சந்தை சமநிலையைக் காட்டும் வரைபடத்தினை அவதானித்து 10 ரூபா விலையில் நுகர்வோர் மிகையினையும், உற்பத்தியாளர் மிகையினையும் இனம் கண்டு கோடிடுக.


| | நுகர்வோர் மிகை | உற்பத்தியாளர் மிகை |
|---|---|---|
| (1) | 1000/- | 1500/- |
| (2) | 1200/- | 1000/- |
| (3) | 800/- | 200/- |
| (4) | 1500/- | 900/- |
| (5) | 900/- | 800/- |




(……...)

(22) இங்கு தரப்பட்டுள்ள வரைபடத்தில் அரசாங்கம் பொருளொன்றின் மீது நேரில் வரியொன்றை விதிப்பதால் நிரம்பல் வளையி $S_1$ இலிருந்து $S_2$ ஆக இடம்பெயர்ந்துள்ளது. அரச வரி வருமானமாக காட்டப்பட்டுள்ள பிரதேசம்.

(1) NFJK
(2) OGHL
(3) FGHJ
(4) NGHK
(5) FEHG




(……...)

Education NCP - www.edncp.lk

(23) நெகிழ்ச்சியுள்ள கேள்வியையும் நெகிழ்வற்ற நிரம்பலையும் கொண்ட ஒரு சந்தையின் மீது வரியொன்று விதிக்கப்படுமாயின்

(1) வரியின் பெருமளவு பளுவை நுகர்வோரே சுமப்பர்

(2) வரியின் பளுவை நுகர்வோர் மட்டுமே சுமப்பர்

(3) வரியின் பெருமளவு பளுவை விற்பனையாளரே சுமப்பர்

(4) வரியின் பளுவானது நுகர்வோர், விற்போர் என்பவரிடயே சமமாக பகிரப்படும்

(5) வரியின் பளு எவ்வாறு பகிரப்படுமென்பதை நிர்ணயிக்க இயலாது (……...)

(24) வரைபடம் ஒரு நுகர்வோர் பண்டத்திற்கான சந்தையைக் காட்டுகின்றது. இப் பண்டத்தின் உற்பத்தியாளருக்கு மானியம் வழங்கும் அரசாங்கத்தினது ஒரு தீர்மானம் நன்மையளிப்பது


(1) நுகர்வோருக்கு மட்டும்

(2) உற்பத்தியாளருக்கு மட்டும்

(3) நுகர்வோருக்கும், உற்பத்தியாளருக்கும் சமமாக

(4) உற்பத்தியாளருக்கு மேலாக நுகர்வோருக்கு

(5) நுகர்வோருக்கு மேலாக உற்பத்தியாளருக்கு




(……..)

(25) உயர்ந்த பட்ச விலைக் கட்டுப்பாட்டின் போதான விலையல்லாத பங்கீட்டு மூலங்களிற்குள் அடங்காதது

(1) இறக்குமதி
(2) கியூ வரிசை முறை
(3) பங்கீட்டு அட்டைகளை பயன்படுத்தல்
(4) இலஞ்சம் பெற்று பங்கிடல்
(5) வேறு பண்டங்களுடன் இணைந்து பங்கிடல் (……..)

(26) ஏனைய காரணிகள் மாறாத போது பண்டமொன்றின் விலை வீழ்ச்சியடைந்து செல்லும் போது விற்பனையாளன் வழங்குகின்ற பொருட்களின் அளவு குறைவடைவதனை புலப்படுத்துவது

(1) நிரம்பலில் ஏற்படும் மாற்றம்
(2) கேள்வி விதி
(3) நிரம்பல் விதி
(4) இழிவு பண்டத்தின் இயல்பாகும்
(5) தொழிநுட்ப முன்னேற்றத்தின் விளைவாகும் (……..)

(27) தொழிநுட்ப முன்னேற்றத்தின் விளைவாக கோப்பி உற்பத்தி மீதான செலவு வீழ்ச்சியடையும் அதே வேளை மக்களின் கோப்பி மீதான விருப்பமும் குறைவடையுமாயின் அதனுடைய சமநிலைத் தொகையானது

(1) அதிகரிக்கும்
(2) வீழ்ச்சியடையும்
(3) மாற்றமின்றி அதே அளவில் இருக்கும்
(4) அதிகரிப்போ அல்லது வீழ்ச்சியோ கோப்பியின் விலையுயர்வு அல்லது வீழ்ச்சியில் தங்கியுள்ளது
(5) அதிகரிப்போ அல்லது வீழ்ச்சியோ கேள்வி நிரம்பலில் ஏற்பட்டு ஒப்பீட்டு ரீதியான மாற்றத்தில் தங்கியுள்ளது (……..)

(28) கோதுமைக்கான விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சியானது

(1) குறுங்காலத்திலும் பார்க்க நீண்ட காலத்தில் குறைவானது

(2) அதற்கான கிடைக்கக்கூடிய பதிலீடுகளின் அளவினால் தீர்மானிக்கப்படும்

(3) கோதுமையை களஞ்சியப்படுத்தி வைக்கக்கூடிய வசதிகளால் தீர்மானிக்கப்படுகின்றது

(4) இறக்குமதி செய்யப்படுகின்ற கோதுமை மீது இறுக்கமான கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் போது அதிக நெகிழ்ச்சியைக் கொண்டிருக்கும்

(5) கோதுமை ஒரு அத்தியவசிய பண்டமென வரையறுக்கப்படுவதில் தங்கியுள்ளது. (……..)


Education NCP - www.edncp.lk

(29) ஒரு நிறுவனம் குறுங்காலத்தில் தொழிற்படும் போது
(1) வெளியீடு அதிகரிக்கும் போது அதன் சராசரி நிலையான செலவு அதிகரிக்கும்
(2) அது தனது மாறும் செலவுகளை நிலையாக வைத்திருக்கும்
(3) நிலையான காரணிகளை மாற்றியமைக்க முடியாது
(4) அதன் மொத்தச் செலவும் மொத்த மாறும் செலவும் ஒரேயளவாக இருக்கும்
(5) அது ஓராண்டு காலப்பகுதியில் இருக்கும் (……..)

(30) நிறைபோட்டி நிறுவனத்தின் கேள்விக் கோடு தொகை அச்சுக்குச் சமாந்திரமாக காணப்படுவது ஏன்?
(1) விளம்பரம் செய்ய முடியாதிருத்தல்
(2) விலைக் கட்டுப்பாடுகள் இருத்தல்
(3) அத்தியவசிய பண்டங்களை மட்டும் உற்பத்தி செய்தல்
(4) கடும் போட்டி காணப்படல்
(5) சந்தை விலையில் நிறுவனம் செல்வாக்குச் செலுத்த முடியாதிருத்தல் (……..)

(31) நிறுவனமொன்று பூச்சிய பொருளியல் இலாபத்தை உழைக்குமாயின்
(1) அதன் வருவாய்கள் வெளிப்படையான (explicit) செலவுகளை செலுத்த போதுமானதன்று
(2) நிறுவன உரிமையாளர் தனக்கு ஒரு சம்பளத்தைப் பெற முடியாதிருக்கும்
(3) நீண்ட காலத்தில் தொழில் முடிவுருத்தப்படும் ஆனால் குறுங்காலத்தில் தொடர்ந்து இயங்கும்
(4) நிறுவன உரிமையாளர் தான் செலவிட்ட மற்றும் முதலீட்டின் பொருட்டு ஒரு கொடுப்பனவை பெற்றுக்கொள்ளும் அதே வேளை அது காலம் மற்றும் முதலீட்டிற்கான அமையச் செலவிற்கு சமனாகும்
(5) குறித்த நிறுவனம் இலாபத்தை உச்சப்படுத்தும் வெளியீட்டு தீர்மானத்தை மேற்கொள்ள வில்லை
(……..)

(32) வரைபடமானது 25 அலகு வெளியீட்டை மேற்கொள்ளும் போட்டித் தன்மை வாய்ந்த நிறுவனமொன்றின் செலவு வளையிகளைக் காட்டுகின்றது. 25 அலகு உற்பத்தியை மேற்கொள்ளும் போதுள்ள மொத்த மாறும் செலவு மொத்த நிலையான செலவுகள் எவை?




| | மொத்த மாறும் செலவு | மொத்த நிலையான செலவு |
|---|---|---|
| (1) | ரூபாய் 250 | ரூபாய் 300 |
| (2) | ரூபாய் 250 | ரூபாய் 125 |
| (3) | ரூபாய் 375 | ரூபாய் 500 |
| (4) | ரூபாய் 425 | ரூபாய் 550 |
| (5) | ரூபாய் 500 | ரூபாய் 625 |

(……..)

Education NCP - www.edncp.lk

(33) நிறை போட்டி நிறுவனமொன்று வாராந்தம் 200 முட்டைகளை உற்பத்தி செய்து முட்டையொன்று ரூ 25 இற்கு விற்கிறது. இவ் வாராந்த 200 முட்டை வெளியீட்டின் செலவுகள் வருமாறு

மொத்த நிலையான செலவு - 2000/= மொத்த மாறும் செலவு - 4000/=

எல்லைச் செலவு - 25/=

குறுங்காலத்தில் நிறுவனம் தனது இலாபத்தை உச்சப்படுத்த அல்லது நட்டங்களை இழிவுபடுத்த யாது செய்யும்

(1) விலையினை அதிகரிக்கும்
(2) வெளியீட்டை அதிகரிக்கும்
(3) வெளியீடடைக குறைக்கும்
(4) வெளியீட்டை தற்போதைய மட்டத்தில் பேணி செல்லும்
(5) உற்பத்தியை முழுமையாக நீக்கும்

(……..)

(34) பின்வருவன உற்பத்தி தொழிற்பாட்டுடன் தொடர்புடைய சில செலவு வகைகளாகும்

A - எரிபொருள்களுக்கான செலவு
B - சாதாரண இலாபம்
C - உரிமையாளரின் ஊழியத்தின் அமையச் செலவு
D - ஒப்பந்த அடிப்படையில் ஊழிய செலவு

மேலுள்ள செலவுகளை நேர் செலவு, நேரில் செலவு என வகைப்படுத்தினால் வரும் சரியான விடை

| | நேர் செலவு | நேரில் செலவு |
|---|---|---|
| (1) | A, B | C, D |
| (2) | A, C | B, D |
| (3) | A, D | B, C |
| (4) | B, D | A, C |
| (5) | B, C | A, D |

(……..)

(35) வர்த்தக சகடோட்டமொன்று வீழ்ச்சியடையும் கட்டத்தில்

(1) முதலீடு அதிகரிப்பதுடன் வெளியீடு வீழ்ச்சியடையும்
(2) வேலையின்மை அதிகரிப்பதுடன் வெளியீடு வீழ்ச்சியடையும்
(3) வேலையின்மை வீழ்ச்சியடைவதுடன் விலைமட்டம் அதிகரிக்கும்
(4) வேலையின்மை வீழ்ச்சியடைவதுடன் வெளியீடு அதிகரிக்கும்
(5) வேலையின்மை அதிகரிப்பதுடன் வெளியீடு அதிகரிக்கும் (……..)

(36) வருமான வழி தேசிய கணக்கீட்டினை மதிப்பிடும் போது தவிர்க்கப்படும் வருமானமாக அமைவது

(1) புலமைச் சொத்து வருவாய் மற்றும் தொழிலாளர் நஷ்டஈடுகள்
(2) பகிரப்படாத இலாபங்களும் பங்கிலாபங்களும்
(3) கம்பனி வருமான வரி
(4) கம்பனிகளாக பதிவு செய்யப்படாத தனி வியாபாரங்களில் இருந்தான வருமானங்கள்
(5) ஒருவர் கடந்த எட்டுவருடமாக குடியிருந்த தனது வீட்டினை விற்பதன் மூலம் பெற்ற வருமானம்

(……..)

(37) நிலையான விலையில் கணித்து பெறப்பட்ட நிலையான விலை மொத்த தேசிய உற்பத்தியுடன் தேறிய வர்த்தக மாற்று விளைவுகளைச் சீராக்கம் செய்யும் போது பெறப்படுவது

(1) மெய்த் தேசிய உற்பத்தியாகும்
(2) மொத்த தேசிய உற்பத்தி சுருக்கியாகும்
(3) மெய்த் தேசிய வருமானமாகும்
(4) மொத்த வளப் பயன்பாடாகும்
(5) சந்தை விலையிலான மொத்த தேசிய உற்பத்தியாகும் (……..)

Education NCP - www.edncp.lk

(38) குறிப்பிட்ட ஒரு பொருளாதாரமொன்றின் தரவுகள் வருமாறு

ஏற்றுமதிகள் 400, இறக்குமதிகள் 600, வரிகள் 800, அரசாங்க செலவீடுகள் 700, சேமிப்பு 200 எனில் இப் பொருளாதாரத்தின் முதலீட்டு மட்டம்

(1) 1400 (2) 1100 (3) 1600

(4) 500 (5) 1300 (……..)

(39) செலவீட்டு வழியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியை கணிப்பிட

(1) நுகர்வு, அரசாங்க கொள்வனவுகள் இருப்புக்களை கூட்ட வேண்டும்

(2) நுகர்வு, முதலீடு ஏற்றுமதிகளைக் கூட்டி இறக்குமதியைக் கழிக்க வேண்டும்

(3) நுகர்வு, முதலீடு அரசாங்க கொள்வனவுகள் மற்றும் தேறிய ஏற்றுமதிகளை கூட்ட வேண்டும்

(4) கூலிகள், வட்டி வாடகைகள் இலாபங்களை கூட்ட வேண்டும்

(5) முதலீடு, சேமிப்பு, உள்நாட்டு செலவினை கூட்ட வேண்டும் (……..)

(40) பொருளாதாரம் ஒன்றின் பணச் சுருக்க இடைவெளியுடன் சமநிலையடையுமாயின் அங்கு காணப்படக் கூடியது

(1) நிறை தொழில் மட்டத்திற்கான மொத்தக் கேள்வியும் நிலவும் மொத்த கேள்வியும் சமமாக இருத்தல்

(2) வேண்டப்படும் மொத்த கேள்வியைக் காட்டிலும், நிலவும் மொத்தக் கேள்வி அதிகமாக இருத்தல்

(3) வேலையின்மை காணப்படல்

(4) நிறை தொழில் மட்ட நிலை காணப்படுதல்

(5) பொருளாதர வளர்ச்சி நிலவும் (……..)

(41) அரச தலையீடுகள் உள்ள மூடிய பொருளாதாரம் ஒன்றின் சில மாறிகள் பின்வருமாறு

சேமிப்பு சார்பு $S = -1500 + 0.25\, yd$

முதலீடு $I = 75\, M$ ரூபா

வரி $T = 100\, M$ ரூபா

அரச செலவு $G = 300\, M$ ரூபா


இப் பொருளாதாரத்தின் சமநிலை தேசிய வருமானத்தையும் சமநிலையில் நுகர்வையும் காட்டும் சரியான விடை யாது?

| | சமநிலை தேசிய வருமானம் | சமநிலையில் நுகர்வு |
|---|---|---|
| (1) | 4800 மி. ரூ | 4525 மி. ரூ |
| (2) | 7200 மி. ரூ | 5325 மி. ரூ |
| (3) | 7200 மி. ரூ | 6825 மி. ரூ |
| (4) | 7200 மி. ரூ | 4525 மி. ரூ |
| (5) | 1800 மி. ரூ | 700 மி. ரூ |

(……..)

Education NCP - www.edncp.lk

(42) அரசு தலையீடுள்ள திறந்த பொருளாதாரமொன்றில் நுகர்வு சார்பு பின்வரும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.




மேலுள்ள நுகர்வு சார்பு $C_0$ இலிருந்து $C_1$ வரை சமாந்திரமாக நகர்வதற்கு செல்வாக்குச் செலுத்தியுள்ள காரணி

(1) எல்லைச் சேமிப்பு நாட்டம் அதிகரித்தல் (2) பொருளாதாரத்தில் இறக்குமதி அதிகரித்தல்
(3) எல்லை நுகர்வு மட்டம் அதிகரித்தல்
(4) அரசு அறவிடும் சுதந்திரமான வரியை நீக்கியமை
(5) எல்லை நுகர்வு மட்டம் அதிகரித்தல் (……..)

(43) சிக்கனமுள்ள எளிமையான பொருளாதாரம் ஒன்றில் எல்லை நுகர்வு நாட்டம் 0.8 ஆகும். தன்னிச்சையான முதலீடு 60 மில்லியன் ரூபாவால் அதிகரிக்குமாயின் சமநிலை வருமான மட்டம்

(1) 200 மில்லியன் ரூபாவால் விரிவடையும் (2) 400 மில்லியன் ரூபாவால் விரிவடையும்
(3) 800 மில்லியன் ரூபாவால் விரிவடையும் (4) 300 மில்லியன் ரூபாவால் விரிவடையும்
(5) 600 மில்லியன் ரூபாவால் விரிவடையும் (……..)

(44) திறந்த பொருளாதார மொன்றில்

| | | |
|---|---|---|
| சமநிலை தேசிய வருமானம் | (Y) | - 8000 M ரூபா |
| நுகர்வு செலவீடு | (C) | - 5800 M ரூபா |
| வரி அறவீடுகள் | (T) | - 900 M ரூபா |
| இறக்குமதிகள் | (M) | - 300 M ரூபா |
| அரசாங்க கொள்வனவுகள் | (G) | - 900 M ரூபா |
| முதலீட்டு செலவீடு | (I) | - 1000 M ரூபா |
| ஏற்றுமதிகளின் பெறுமதி | (X) | |

(1) 1500 M ரூபா (2) 6800 M ரூபா (3) 7700 M ரூபா
(4) 6500 M ரூபா (5) 1000 M ரூபா (……..)

(45) பெருக்கி என்பதனால் பொதுவாக கருதப்படுவது யாதெனில் முதலீட்டில் அல்லது அரசாங்க செலவீட்டில் அல்லது ஏற்றுமதி வருவாய்களில் ஏற்படும் ஆரம்ப அதிகரிப்பின் காரணமாக பின்வரும் மாறியொன்றில் எற்படும் மிகப் பெரிய அதிகரிப்பேயாகும். அம்மாறி

(1) விலைமட்டம் ஆகும் (2) வட்டிவீதம் ஆகும்
(3) வேலையின்மை மட்டம் ஆகும் (4) சேமிப்பு ஆகும்
(5) வருமான மட்டம் ஆகும் (……..)

Education NCP - www.edncp.lk

(46) எளிய பொருளாதாரம் ஒன்றின் நுகர்வுசார்பு $C = 800 + 0.6y$ தன்னிச்சையான முதலீடுகள் 300 மில்லியன் ரூபா ஆகும். இப் பொருளாதாரம் தொடர்பில் பொருத்தமற்ற விடையாக அமைவது.

(1) வரியில் ஏற்படக் கூடிய 50 மில்லியன் ரூபா அதிகரிப்பு சமநிலை வருமானம்

(2) சமநிலை தேசிய வருமானம் 2750 மில்லியன் ரூபாவாகக் காணப்படல்

(3) சமநிலை சேமிப்பு 300 மில்லியன் ரூபாவாகக் காணப்படல்

(4) சமநிலையில் நுகர்வு 2450 மில்லியன் ரூபாவாகக் காணப்படல்

(5) சமநிலையில் உட்பாய்ச்சல் 300 மில்லியன் ரூபாவாகக் காணப்படல் (……..)

(47) ஏனையவை மாறாத நிலையில் முதலீட்டு செலவில் ஏற்பட்ட ரூபா 75 மில்லியன் அதிகரிப்பானது தேசிய வருமானத்தில் ரூபா 300 மில்லியன் அதிகரிப்பினை ஏற்படுத்துமாயின் எல்லை நுகர்வு நாட்டத்தின் பெறுமதி யாது?

(1) 0.8 (2) 0.75 (3) 0.5 (4) 0.4 (5) 0.25

(……..)

(48) தேசிய கணக்குகளுடன் தொடர்புடைய பின்வரும் கூற்றுக்களில் தவறானது.

(1) $y - (c + G) = 1 + (x - m)$ (2) $y + m = c + 1 + G$

(3) $y = c + 1 + G$ (4) $y = c + 1 + G + (x - m)$

(5) $y + m = c + 1 + G + x$ (……..)

(49) மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கும் போது இடம்பெறும் என பொருளியலாளர்கள் கருதுவது

(1) ஏற்றுமதிகள் அதிகரிக்கும் என்பதாகும் (2) ஏற்றுமதிகள் வீழ்ச்சியடையும் என்பதாகும்

(3) இறக்குமதிகள் அதிகரிக்கும் என்பதாகும் (4) இறக்குமதிகள் வீழ்ச்சியடையும் என்பதாகும்

(5) தேசிய ஏற்றுமதிகள் அதிகரிக்கும் என்பதாகும்

(……..)

(50) அரச கருமங்கள் இல்லாத எளிமையான பொருளாதாரமொன்றுக்குரிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவிடக் கூடிய வருமானம் $Y^d$ | நுகர்வு செலவு C |
|---|---|
| 500 | 400 |
| 1000 | 800 |
| 1500 | 1200 |

இப் பொருளாதாரத்தில் செலவிடக் கூடிய வருமானம் அதிகரித்துச் செல்லும் நிலையில்

(1) MPC அதிகரித்து APC குறைவடையும்

(2) MPC யும் APC யும் அதிகரிக்கும்

(3) MPC யும் APC யும் குறையும்

(4) MPS அதிகரித்து APC குறைவடையும்

(5) MPS யிலும் APC யிலும் மாற்றம் ஏற்படாது.

Education NCP - www.edncp.lk

පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - උතුරු මැද පළාත
மாகாணக் கல்வித் திணைக்களம் - வட மத்திய மாகாணம்
DEPARTMENT OF EDUCATION – NORTH CENTRAL PROVINCE

| தரம் |
|---|
| 12 |

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2017

பாடம் - பொருளியல்

பாடசாலையின் பெயர் : ....................................................................................................

மாணவர் பெயர்/ சுட்டெண் : ......................................................................................................................................................

நேரம் 3. 00 மணித்தியாலம்

**அறிவுறுத்தல்கள் :-**

- **ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**
- **உபபிரிவு "அ" உபபிரிவு "ஆ" ஆகியவற்றிலிருந்து குறைந்த பட்சம் இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து, எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**
- **வரைபுத்தாள்கள் வழங்கப்படும்**

Education NCP - www.edncp.lk

## உபபிரிவு (அ)

**(இப்பிரிவிலிருந்து குறைந்த பட்சம் இரு வினாக்களை தெரிவு செய்க)**

01. I. பொருளாதாரமொன்றின் செயலாற்றத்தை அளவிடுவதற்கு பயன்படக் கூடிய தகுதி விதிகள் எவை? (4 புள்ளிகள்)

II. அமையச் செலவு என்றால் என்ன? அமையச் செலவு பூச்சியமாக காணப்படும் சந்தர்ப்பங்கள் யாவை? (4 புள்ளிகள்)

III. முயற்ச்சியாண்மையாணது ஏனைய உற்பத்திக் காரணிகளிலிருந்து எவ்வகையில் வேறுபடுகின்றது? (4 புள்ளிகள்)

IV. "உற்பத்தியின் வினைத்திறன்" என்றால் என்ன? (4 புள்ளிகள்)

V. பொருத்தமான உதாரணங்களைப் பயன்படுத்தி "இலவசப் பொருள்", "பொருளாதாரப் பொருள்" என்பவற்றை வேறுபடுத்துக. (4 புள்ளிகள்)

02. I. பொருளாதார முறைமையொன்றின் தொழிற்பாடுகள் யாவை? (3 புள்ளிகள்)

II. சந்தைப் பொருளாதாரமொன்றின் தொழிற்பாடுகள் எப்போதும் சாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும் என்பதை ஏற்றுக்கொள்வீரா? ஆராய்க. (4 புள்ளிகள்)

III. உற்பத்தி சாத்திய வளையி என்றால் என்ன? அதனை எந்த எடுகோளின் அடிப்படையில் விளக்குவீர்? (5 புள்ளிகள்)

IV. உற்பத்தி சாத்திய வளையின் வெளிப்புற நகர்வை எற்படுத்தக்கூடிய காரணிகள் யாவை? (4 புள்ளிகள்)

V. "பொருளியல் ரீதியாக சிந்தித்தல்" என்றால் என்ன? (4 புள்ளிகள்)

03. I. “கேள்வி விதி” என்றால் என்ன? கேள்வி விதி தொழிற்படுவதற்கான காரணிகள் யாவை? (5 புள்ளிகள்)

II. நுகர்வோன் மிகை என்பது பண்டமொன்றின் கேள்வி நெகிழ்ச்சியுடன் எதிர்கணிய தொடர்புடையது எனும் கூற்றினை ஏற்றுக்கொள்வீரா? வரிப்படத்தின் உதவியுடன் விளக்குக. (5 புள்ளிகள்)

III. பண்டமொன்றின் நிரம்பலை தீர்மானிக்கும் விலை தவிர்ந்த ஏனைய காரணிகள் யாவை? (5 புள்ளிகள்)

IV. பின்வரும் நெகிழ்ச்சி எத்தகைய பண்டத்திற்கு காணப்படும்.

(அ) எதிர்கணிய வருமான நெகிழ்ச்சி

(ஆ) நேர்கணிய விலைசார் கேள்வி நெகிழச்சி

(இ) ஒன்றுக்கு கூடிய நேர்க்கணிய வருமான நெகிழ்ச்சி

(ஈ) நேர்க்கணிய குறுக்கு நெகிழ்ச்சி

(உ) ஒன்றுக்கு குறைந்த விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சி (5 புள்ளிகள்)

04. குறித்த பண்டமொன்றின் நேர்கோட்டு கேள்வி, நிரம்பல் சமன்பாடுகள் பின்வருமாறு தரப்படுகின்றது

$Qd = 120 - 2p$ $Qs = -40+2p$

I. கேள்வி நிரம்பல் கோடுகளை வரைந்து சந்தை சமநிலை விலை, தொகை என்பவற்றைக் கணிப்பிடுக. (4 புள்ளிகள்)

II. சமநிலை விலையில் விலைக் கேள்வி நெகிழ்ச்சி, நிரம்பல் நெகிழ்ச்சி என்பவற்றைக் கணிப்பிடுக. (4 புள்ளிகள்)

III. குறித்த பண்டத்திற்கு அரசாங்கம் ரூபா 20.00 மானியத்தை அறிமுகம் செய்யுமாயின் சந்தை சமநிலை விலை தொகை என்பன யாவை? (4 புள்ளிகள்)

IV. மானியத்தினால் அரசுக்கு ஏற்படும் மொத்த செலவு யாது? (4 புள்ளிகள்)

V. மானியத்தின் பின் நுகர்வோன் மிகை யாது? (4 புள்ளிகள்)

05. I. “ கிபன்பண்டம்”, “இழிவுப் பண்டம்” ஆகியவற்றை வேறுபடுத்துக. (4 புள்ளிகள்)

II. உயர்ந்தபட்ச கட்டுப்பாட்டு விலையை செயற்திறனாக்க அரசு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் யாவை? (4 புள்ளிகள்)

III. “மாறும் காரணிகள்” “நிலையான காரணிகள்” ஆகியவற்றை வேறுபடுத்துக. (4 புள்ளிகள்)

IV. குறைந்து செல்லும் எல்லை விளைவு விதி என்றால் என்ன? (4 புள்ளிகள்)

V. “அதிகரிக்கும் அளவுத்திட்ட விளைவு” உற்பத்திச் செலவில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும்? (4 புள்ளிகள்)

Education NCP - www.edncp.lk

## உபபிரிவு (ஆ)

**(இப்பிரிவிலிருந்து குறைந்த பட்சம் இரு வினாக்களை தெரிவு செய்க)**

06. I. எச்சந்தர்பங்களில் ஒரு உற்பத்திக் காரணியின் மொத்த உழைப்புக்களில் மாற்றல் வருமானங்கள் அடங்கியிருக்கும். வரிப்படம் ஒன்றைக் கையாண்டு உமது விடையை விளக்குக. (4 புள்ளிகள்)

II. நான்குகை சந்தை அமைப்புக்களையும் பெயரிடுக? அதில் ஏதாவது சந்தை அமைப்பொன்றின் பண்புகளைத் தருக. (4 புள்ளிகள்)

III. உதாரணங்கள் தந்து "வெளிப்படையான செலவுகளையும்", "உட்கிடையான செலவுகளையும்" வேறுபடுத்துக. (4 புள்ளிகள்)

IV. நேர்க்கணியப் பொருளியல் இலாபம் என்பதை விளக்குவதுடன், அது சந்தை நிரம்பல் வளையியில் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தும் என்பதை ஆராய்க (4 புள்ளிகள்)

V. தரப்பட்டுள்ள குறுங்காலத்தில் விலையை ஏற்கும் உற்பத்தி நிறுவனமொன்று 20 அலகுகளை உற்பத்தி செய்வதாக கருதுக. அலகொன்றின் சந்தை விலை ரூபா 50 ஆகும். 20 அலகுகள் வெளியீட்டில் சராசரி மொத்த செலவு ரூபா 60 ஆகவும், சராசரி மாறும் செலவு ரூபா 40 ஆகவும் உள்ளன.

(அ) இந்த குறுகிய காலத்தில் நிறுவனம் அடையும் இலாபத்தின் அல்லது நட்டத்தின் அளவு யாது? (2 புள்ளிகள்)

(ஆ) இந் நிறுவனதின் மொத்த நிலையான செலவு எவ்வளவு? (2 புள்ளிகள்)

07. I. வர்த்தக சகட ஓட்டம் (Business Cycle) என்பதனால் கருதப்படுவது யாது? (3 புள்ளிகள்)

II. வர்த்தக சகட ஓட்டம் தொடர்பில் பின்வரும் நான்கு எண்ணக்கருக்களையும் விளக்குக.

அ. பின்னடைவு நிலை (Recession) ஆ. மந்த நிலை (Trouugh)

இ. செழிப்பு அல்லது விரிவு நிலை (Expansion) ஈ. உச்ச நிலை (Peak) (8 புள்ளிகள்)

III. "நேர்க்கணிய வெளியீட்டு இடைவெளி", "எதிர்க்கணிய வெளியீட்டு இடைவெளி" வேறுபடுத்துக (4 புள்ளிகள்)

IV. தேசிய கணக்குகளின் நடைமுறைப் பிரயோகம் யாவை? (5 புள்ளிகள்)

08. I. திறந்த பொருளாதாரமொன்றின் மொத்த செலவின் மாறிகளை குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றையும் தீர்மானிக்கும் காரணிகளை பெயரிடுக. (6 புள்ளிகள்)

II. எல்லை நுகர்வு நாட்டத்தினதும், எல்லை சேமிப்பு நாட்டத்தினதும் கூட்டுத்தொகை எப்பொழுதும் ஒன்றுக்கு சமமாக இருப்பது ஏன்? நிறுவுக. (4 புள்ளிகள்)

III. கருதுகோள் - ரீதியான பொருளாதாரமொன்றுக்காக பேரினப் பொருளாதார மாதிரியொன்று பின்வருமாறு

$C = 100 + 0.75y$ $I = 500$

$G = 600$ $Nx = -300$

(அ) இம் மாதிரியின் தன்னிச்சையான செலவீடுகளின் மொத்தப் பெறுமதி யாது? (2 புள்ளிகள்)

Education NCP - www.edncp.lk

(அ) இப் பொருளாதாரத்தின் சமநிலை வருமான மட்டத்தினை நிர்ணயிக்குக. (5 புள்ளிகள்)

(இ) இப் பொருளாதாரத்தின் முதலீட்டு பெருக்கியின் பெறுமதி யாது? (3 புள்ளிகள்)

09. I. பேரினப் பொருளாதார சமநிலை என்றால் என்ன? (4 புள்ளிகள்)

II. நுகர்வு தொழிற்பாடு என்பதால் கருதப்படுவது யாது? (4 புள்ளிகள்)

III. பொருளாதாரமொன்றின் பின்வரும் தரவுகள் உமக்கு தரப்படுகின்றன.

| வருமானம் (Y) | நுகர்வு(C) |
|---|---|
| 400 | 375 |
| 500 | 450 |

(அ) நுகர்வுக் கோட்டின் சரிவின் (b) பெறுமதியைக் கணிப்பிடுக.

(ஆ) நுகர்வுக் கோட்டின் சமன்பாட்டினைக் காண்க?

(இ) சேமிப்பு சமன்பாட்டினைத் தருக

(ஈ) எந்த வருமான மட்டத்தில் சேமிப்பு பூச்சியமாக காணப்படும்? (8 புள்ளிகள்)

IV. (A) எளிய பொருளாதாரமொன்றின் சமநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தும் மாறிகள் இரண்டினைத் தருக. (2 புள்ளிகள்)

(B) எளிய பொருளாதாரமொன்றின் சமநிலையை வரிப்படத்தில் காட்டுக. (2 புள்ளிகள்)

10. I. பின்வரும் தரவுகள் பேரினப் பொருளாதாரமொன்றிற்கு உரியதாகும். (பெறுமதிகள் மில்லியன் ரூபாயில் தரப்பட்டுள்ளன)

$C = 400 + 0.8\,yd$

$I = 80$

$G = 400$

$T = 220$

இதில் C நுகர்வு, I முதலீடு, G அரசாங்க செலவீடுகள், T வரிகள்

மேலே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

(அ) சமனிலை தேசிய வருமான மட்டம் யாது? (4 புள்ளிகள்)

(ஆ) முதலீடு ரூபா 20 மில்லியனால் அதிகரிக்குமாயின் சமநிலை தேசிய வருமானத்திற்கு யாது நிகழும்? (4 புள்ளிகள்)

(இ) பொருளாதாரத்தில் நிறை தொழில் தேசிய வருமான மட்டம் ரூபா 4000 மில்லியனாக இருப்பதற்கு இப்பொருளாதாரத்தில் முதலீடானது எவ்வளவாக அமைய வேண்டும்? (4 புள்ளிகள்)

II. ஒரு பொருளாதாரத்தில் சேமிப்பு, முதலீடு என்பவற்றில் ஏற்படுகின்ற மாற்றங்கள் அப்பொருளாதார நடவடிக்கைகளின் மட்டத்தில் எவ்வாறு தாக்கத்தை உண்டு பண்ணுகிறது என்பதை விவரிக்க. (4 புள்ளிகள்)

III. திறந்த மாதிரியில் சமநிலை தேசிய வருமானத்தை கூறுவதற்கு இரண்டு வழிமுறைகள் உள்ளன. அதனை அவற்றின் வழமையான குறியீடுகளுடன் தருக. (4 புள்ளிகள்)

Education NCP - www.edncp.lk